**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி/கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ/ மாணவியருக்கு வழங்கப்படும் உணவு வகைகள் அடங்கிய உணவுப் பட்டியலில் மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.


---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை**

**அரசாணை (நிலை) எண்.26** | **நாள் 25.03.2022**
**பிலவ, பங்குனி 11**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.14, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 11.05.2004.
2. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.பி2/4104/2021, நாள் 07.10.2021

******

**ஆணை:**

இத்துறையின் மூலம் மாநிலம் முழுவதும் செயல்படும் 1354 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ/ மாணவியருக்கு, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, கல்லூரி/ஐடிஐ விடுதிகள் மற்றும் பள்ளி விடுதிகள் என தனித்தனியே வகைப்படுத்தப்பட்டு உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

2. 09.07.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற இத்துறையின் ஆய்வுக் கூட்டத்தில் விடுதி மாணவ/மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணத்தில் மாற்றம் இல்லாமல் புதிதாக உணவுப் பட்டியல் தயாரிக்கும்படி அறிவுறுத்தப்பட்டது.

3. இதனைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துருவில், கல்லூரி/பள்ளி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ/ மாணவியருக்கு Institute of Hotel Management Catering Technology and Applied Nutrition பரிந்துரைத்துள்ள பட்டியலின் அடிப்படையில், காலை, மதியம், இரவு, சிறப்பு உணவு மற்றும் மாலை சிற்றுண்டி ஆகியவற்றை அட்டவணைப்படுத்தி மாதாந்திர உணவுக் கட்டணத்தில் மாற்றம்

இல்லாமல், உணவு வகைகளுக்கான பட்டியலில் மாற்றம் செய்யலாம் என பரிந்துரைத்துள்ளார்.

4. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து இத்துறையின் மூலம் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி/கல்லூரி விடுதி மாணவ/ மாணவியருக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உணவுக் கட்டணத்தில் மாற்றம் இல்லாமல், இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு உணவு வகைகளுக்கான பட்டியல் மாற்றியமைக்கப்பட்டும், தோசைக்கல் மற்றும் இடியாப்பம் அச்சு இயந்திரம் ஆகியவற்றை, விடுதிகளுக்கு வழங்கப்படும் அவசர பராமரிப்புப் பணிகளுக்கான செலவினத் தொகையில் வாங்குவதற்கும் அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை 03.06.2022 முதல் அமலுக்கு வருகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர்,
சென்னை- 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்
நல ஆணையர், சென்னை- 5.
சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

<u>நகல்</u> :
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (சிறுபான்மையினர் நலன்
மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலன்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச்
செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

வா. சுதா
**பிரிவு அலுவலர்**

**அரசாணை (நிலை) எண்.26, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 25.03.2022–ன் இணைப்பு**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதி மாணவ/மாணவியருக்கு வழங்கப்பட வேண்டிய உணவு வகைகள் அடங்கிய திருத்தப்பட்ட உணவுப் பட்டியல்

(i) <u>காலை (பள்ளி மற்றும் கல்லூரி)</u>

| கிழமை | உணவு வகைகளின் விவரம் |
|---|---|
| திங்கள் | சேமியா கிச்சடி, தக்காளி சட்னி/சாம்பார் |
| செவ்வாய் | பூரி, மசால் |
| புதன் | இட்லி, சாம்பார், சட்னி |
| வியாழன் | இடியாப்பம், பட்டாணி குருமா (அல்லது) தேங்காய் பால். |
| வெள்ளி | பொங்கல் (அல்லது) வரகு பொங்கல் (அல்லது) தினை அரிசி பொங்கல், கத்தரிக்காய் கொத்சு, வடை. |
| சனி | ரவா கிச்சடி, தேங்காய் சட்னி |
| ஞாயிறு | தோசை (அல்லது) நவதானிய தோசை, சாம்பார், சட்னி |

(ii) <u>மதியம் (பள்ளி மற்றும் கல்லூரி)</u>

| கிழமை | உணவு வகைகளின் விவரம் |
|---|---|
| திங்கள் | சாதம், சாம்பார், இருவகை பொரியல், ரசம், மோர், முட்டை (அல்லது) சாதம், சாம்பார், 1 பொரியல், ரசம், மோர், முட்டை மசாலா |
| செவ்வாய் | காய்கறி பிரியாணி, காய்கறி குருமா, முட்டை |
| புதன் | சாதம், ஆட்டிறைச்சி/ கோழி குருமா (அல்லது) மட்டன்/சிக்கன் குழம்பு, பொரியல், மோர் |

| | |
|---|---|
| வியாழன் | தக்காளி சாதம் (அல்லது) லெமன் சாதம் (அல்லது) தயிர் சாதம், உருளை பொரியல், முட்டை |
| வெள்ளி | சாதம், காரக்குழம்பு, பொரியல்/கூட்டு, ரசம், மோர், முட்டை. |
| சனி | புதினா சாதம் (அல்லது) காரட் சாதம் (அல்லது) கறிவேப்பிலை சாதம், முட்டை, அப்பளம்/பருப்பு துவையல் |
| ஞாயிறு | சாதம், முட்டை குருமா, ரசம், மோர் |

(iii) <u>இரவு (பள்ளி மற்றும் கல்லூரி)</u>

| கிழமை | உணவு வகைகளின் விவரம் |
|---|---|
| திங்கள் | சப்பாத்தி, குருமா |
| செவ்வாய் | இடியாப்பம், குருமா (அல்லது) காய்கறி கூட்டு (Vegetable Stew) |
| புதன் | காய்கறி புலாவ், குருமா/ரைத்தா |
| வியாழன் | ஊத்தாப்பம், சட்னி, சாம்பார் |
| வெள்ளி | கோதுமை தோசை, தக்காளி சட்னி |
| சனி | சாதம், சாம்பார், பொரியல், ரசம் |
| ஞாயிறு | தக்காளி சாதம் (அல்லது) சாம்பார் சாதம், வறுவல் |

(iv) <u>ஆட்டிறைச்சி/கோழி இறைச்சி வாரத்திற்கு ஒரு நாள்</u>

| நாள் | கல்லூரி விடுதி | பள்ளி விடுதி |
|---|---|---|
| 1 – வது மற்றும் 3 –வது வாரம் ( புதன் கிழமை) | ஆட்டிறைச்சி – 80 கிராம் வீதம் | ஆட்டிறைச்சி – 80 கிராம் வீதம் |
| 2 – வது மற்றும் 4 –வது வாரம் ( புதன் கிழமை) | கோழி இறைச்சி– 120 கிராம் வீதம் | கோழி இறைச்சி – 100 கிராம் வீதம் |

(v) முட்டை/வாழைப்பழம் (பள்ளி மற்றும் கல்லூரி)

நாள்தோறும் வழங்கப்படும் உணவு வகைகளுடன் வாரத்திற்கு ஐந்து முட்டைகள் என ஒரு மாதத்திற்கு ஒரு மாணவருக்கு 20 முட்டைகள்

முட்டை சாப்பிடாத மாணவ, மாணவியருக்கு ஒரு வாழைப்பழம்.

(vi) மாலை நேர சிற்றுண்டி (பள்ளி மற்றும் கல்லூரி)

நாள்தோறும் மாலை நேரங்களில் வேகவைத்த பயறுகள் (சுண்டல்) மற்றும் சுக்குமல்லி காபி/ கருப்பட்டி தேநீர்

(vii) பண்டிகை கால சிறப்பு உணவு (பள்ளி மற்றும் கல்லூரி)

விடுதி மாணவ/மாணவியருக்கு பண்டிகை நாட்களில் வழங்கப்படும் சிறப்பு உணவுகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

**ஆ.கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**// உண்மை நகல் //**

ஜா. சுதா

**பிரிவு அலுவலர்**

Pl